**sns academy**

**an International CBSE Finger Print School**
**Coimbatore**

## காலத்தேர்வு – 1

**வகுப்பு : நான்காம் வகுப்பு** **தமிழ்** **தேதி : 15. 07. 25**
**மதிப்பெண்கள் : 40** **கால அளவு : 1 ½ மணிநேரம்**

**I.கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.** **5x1=5**

ஒரு ஊரில் ஒரு விவசாயி இருந்தார். அவர் தினமும் காலையில் எழுந்து தன் நிலத்திற்குச் செல்வார். அங்கு பயிர்களைப் பாதுகாப்பார். களைகளைப் பிடுங்கி எறிவார். நீர்ப்பாய்ச்சி, உரமிட்டு, பயிர்களை வளர்ப்பார். ஒரு நாள், அவர் வயலில் வேலை செய்யும்போது ஒரு சிறிய பறவைக் கூடு ஒன்று கீழே விழுவதைப் பார்த்தார். கூட்டில் சிறிய பறவைக் குஞ்சுகள் இருந்தன. விவசாயி உடனே கூட்டை எடுத்து மரத்தில் பொருத்தினார். பறவைக் குஞ்சுகள் பாதுகாப்பாக இருந்தன.

**வினாக்கள் :**

1. விவசாயி எங்கு செல்வார்?
2. விவசாயி பயிர்களை எப்படி வளர்ப்பார்?
3. விவசாயி எதைக் கண்டார்?
4. கூட்டில் எவை இருந்தன ?
5. பறவைக் குஞ்சுகள் பாதுகாப்பாக இருக்கக் காரணமானவர் யார்?

**II. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **5x1/2=2 ½**

1. ‘பிறப்பெடுத்தேன்’ இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________

   அ) பிறப் + பெடுத்தேன் ஆ) பிறப்பு + எடுத்தேன்

   இ) பிறப் + எடுத்தேன் ஈ) பிறப்ப + எடுத்தேன்

2. ‘ஓலைச்சுவடி’ இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________

   அ) ஓலை + சுவடி ஆ) ஓல + சுவடி

   இ) ஓலைச் + சுவடி ஈ) ஓலச் + சுவடி

3. தேர்ந்து + எடுக்க என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ___________

அ) தேர்ந்தேடுக்க ஆ) தேர்ந்தெடுக்க

இ) தேர்ந்துதடுக்க ஈ) தேர்ந்துடுக்க

4. குறை – இச்சொல்லின் எதிர்ச்சொல் __________________

அ) தீமை ஆ) தவறு

இ) நிறை ஈ) நிரை

5. 'என்னில்' என்ற சொல்லின் பொருள் ________________

அ) உனக்குள் ஆ) நமக்குள்

இ) உலகுக்குள் ஈ) எனக்குள்

**III. கோடிட்ட இடத்தை நிரப்புக.** **5x1/2=2 ½**

1. திணை ______________ வகைப்படும்.

அ) நான்கு ஆ) மூன்று

இ) இரண்டு ஈ) ஒன்று

2. பால் ______________ வகைப்படும்.

அ) ஆறு ஆ) நான்கு

இ) ஐந்து ஈ) ஏழு

3. ஒன்றுக்கும் மேற்பட்ட மனிதர்களைக் குறிப்பது ___________ எனப்படும்.

அ) பலர்பால் ஆ) பலவின்பால்

இ) ஒன்றன்பால் ஈ) ஆண்பால்

4. அஃறிணையில் ஒன்றை மட்டும் குறிப்பது ______________

அ) பலர்பால் ஆ) பலவின்பால்

இ) ஒன்றன்பால் ஈ) ஆண்பால்

5. அஃறிணையில் ஒன்றுக்கும் மேற்பட்டவற்றைக் குறிப்பது __________ எனப்படும்.

அ) பலர்பால் ஆ) பலவின்பால்

இ) ஒன்றன்பால் ஈ) பெண்பால்

**IV. சொற்றொடர் அமைத்து எழுதுக.** **5x1=5**

1. மழை  2. அம்மா  3. பள்ளி  4. பரிசு  5. தம்பி

**V. பொருத்தமான சொல்லால் இடைவெளியை நிரப்புக.** **5x1=5**

( வலி, அலகு, வழி, கண், உடற்பயிற்சி )

1. நாம் தினமும் _________ செய்தால் உடல் ஆரோக்கியமாக இருக்கும்.
2. நாம் _________ மூலம் பிறரைப் பார்க்கிறோம்.
3. கிளி ________ கொண்டு பழத்தைச் சாப்பிட்டது.
4. கல்லடிபட்ட நாய் __________________ தாங்க முடியாமல் துடிதுடித்தது.
5. வீட்டுக்குச் செல்லும் ___________________யில் நண்பனைக் கண்டேன்.

**VI. கீழ்க்காணும் சொற்களைப் பால் வகையில் அட்டவணைப்படுத்துக.**

**10x1/2=5**

தருமன், மேய்ந்தன, மான், வந்தனர், கயல்விழி, மரம், பேருந்துகள்,சென்றனர், தங்கை, மன்னன்.

**VII. கீழ்க்காணும் வினாக்களில் எவையேனும் ஐந்திற்கு மட்டும் விடை எழுதுக.** **5x2=10**

1. சொல்லில் விளையாடச் சொல்லித் தந்தவள் யார்?
2. எதைச் சொல்ல முடியவில்லை என்று நா.காமராசன் குறிப்பிடுகிறார்?
3. பனைமரத்திலிருந்து கிடைக்கும் உணவுப் பொருள்கள் யாவை?
4. முளைப்பாரி பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள எரு வகைகள் எவையெவை?
5. பனைமரத்திலிருந்து செய்யக்கூடிய விளையாட்டுப் பொருள்கள் யாவை?
6. முளைப்பாரி பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள பயறுகள் யாவை?
7. பனைமரம் ‘தமிழகத்தின் மரம்’ என அழைக்கப்படுவதன் காரணம் என்ன?

**VIII. கீழ்க்காணும் வினாக்களில் ஏதேனும் ஒன்றிற்கு மட்டும் விடை எழுதுக.**

**1x5=5**

1. பனைமரத்தை நாம் எவ்வாறு பாதுகாக்கலாம்?
2. அன்னைத் தமிழே பாடலில் நா.காமராசன் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.